# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~

~~(கு.வி.மு.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102145

1. District : மாவட்டம் திண்டுக்கல் | PS: காவல்நிலையம் ல.ஒ.த. பிரிவு | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 03/2025 | Date: நாள் 29.04.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 28.04.2025 at 11.40 hrs
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 28.04.2025 at 05.53 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.04.2025 | Time : நேரம் 07.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 12 கி.மீ தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சிறுவத்தூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. மகேஸ்வரன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பழனிச்சாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 29/2025 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விற்பனை பிரதிநிதி | (g) Address : முகவரி கதவு எண் 2/60 பண்ணைப்பட்டி, ராஜக்காபட்டி கிராமம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. முகமது சக்கரியா, கிராம நிர்வாக அலுவலர், சிறுவத்தூர் வருவாய் கிராமம், வேடசந்தூர் தாலுகா திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 29/04/25
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.04.2025 / 10.00hrs.

Name: பெயர் U. பழனிச்சாமி
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்: 3/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 29.04.2025-ம் தேதி காலை 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திரு.P.மகேஸ்வரன், வயது 29/2025, த/பெ பழனிச்சாமி, கதவு எண்.2/60, பண்ணைப்பட்டி, ராஜக்காபட்டி கிராமம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று 29.04.2025ம் தேதி காலை 08.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்:- திரு.P.மகேஸ்வரன், வயது 29/2025, த/பெ பழனிச்சாமி, கதவு எண்.2/60, பண்ணைப்பட்டி, ராஜக்காபட்டி கிராமம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் பெறுநர்:- காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, திண்டுக்கல். ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.Sc (Bio Chemistry) படித்துள்ளேன். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. தற்போது திண்டுக்கலில் உள்ள ஒரு மெடிக்கல் கடையில் விற்பனை பிரதிநிதியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கதவு எண்.55/11, GTN சாலை, பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல் என்ற முகவரியில் வசித்து வரும் திரு.வெங்கிடுசாமி செட்டியாரின் மகன் திரு.கண்ணன் மற்றும் அவருடன் உடன்பிறந்த திரு.ராஜாராம், திருமதி.மணிமேகலை ஆகியோரிடமிருந்து அவர்களுக்கு சொந்தமான சுமார் 46 செண்ட் புஞ்சை நிலத்தை ரூ.92,000/-க்கு விலைபேசி வாங்கினேன். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, சிலுவத்தூர் கிராம சர்வே எண்.436/15, 436/7A1A1ல் உள்ளடங்கிய மேற்படி 46 செண்ட் நிலத்திற்கான விற்பனை பத்திரத்தை வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1919/2025 ஆக கடந்த 22.03.2025ம் தேதி பதிவு செய்தேன். அங்கிருந்த பதிவுத்துறை அலுவலர்கள் என்னிடம் நான் வாங்கிய நிலத்திற்கான பட்டா அதுவாகவே எனது பெயருக்கு மாறுதல் செய்யப்பட்டு விடும் என்று தெரிவித்தனர். அதனால் நான் தனியாக பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பம் எதுவும் செய்யவில்லை. இந்நிலையில் கடந்த 26.03.2025 அன்று சுமார் 10.15 மணியளவில் 9629828984 என்ற மொபைல் எண்ணிலிருந்து 7402505631 என்ற எனது மொபைல் எண்ணிற்க்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர் அவரது பெயர் முகமது சக்கரியா என்றும் சிலுவத்தூர் VAO என்றும் நான் வாங்கிய நிலத்திற்க்கு பட்டா மாற்றம் தொடர்பாக ஆவணங்களை எடுத்துக்கொண்டு VAO அலுவலகத்தில் அவரை சந்திக்குமாறு தெரிவித்தார். நான்

ஏற்கனவே பத்திரம் பதிவு செய்யும் போது பட்டா அதுவாகவே மாறிவிடும் என்று பதிவுத்துறையினர் தெரிவித்ததால் பட்டா மாற்றம் தொடர்பாக சிலுவத்தூர் VAO முகமது சக்கரியாவை அவரது அலுவலகத்திற்க்கு சென்று பார்க்கவில்லை. பின்னர் பட்டா மாறுதல் செய்து விட்டார்களா என்று அறிய வருவாய்துறை இணையதளத்தில் 10.04.2025 அன்று என்னுடைய விண்ணப்ப எண். 2025/0103/13/368055-ன் நிலையை பரர்த்தபோது பட்டா எண். 1795ல் ஏற்கனவே நிலத்தின் உரிமையாளராக இருந்த திரு.கண்ணன் மற்றும் திரு. ராஜாராம் ஆகியோரின் பெயர்களோடு என் பெயரையும் சேர்த்து ஒரே பட்டாவாக சர்வே எண்.436/15,436/7A1A1ல் உள்ள நிலங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. திரு.கண்ணன், திரு.ராஜாராம் ஆகியோரின் பெயர்களை நீக்கம் செய்துவிட்டு எனது பெயரில் மட்டுமே பட்டா வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யபட்டிருக்கவில்லை. எனவே மறுபடியும் பட்டா மாறுதல் செய்து தரக்கோரி கடந்த 15.04.2025 அன்று இ-சேவை மையம் வழியாக விண்ணப்ப எண்.2025/0103/13/372418 ன் படி விண்ணப்பித்தேன். பின்னர் 24.04.2025 அன்று சுமார் 01.40 மணியளவில் சிலுவத்தூர் VAO திரு.முகமது சக்கரியா அவர்கள் அவரது மொபைல் எண்.9629828984 என்ற எண்ணிலிருந்து எனது மொபைல் எண்.7402505631க்கு அழைத்தார். நான் எடுத்துப்பேசிய போது சிலுவத்தூர் VAO திரு.முகமது சக்கரியா அவர்கள் என்னிடம் நான் வாங்கிய நிலம் தொடர்பாக ஆவணங்களை எடுத்துக்கொண்டு அவாது அலுவலகத்தில் வந்து அவரை சந்திக்குமாறு தெரிவித்தார். நான் கொஞ்சம் வேலையாக இருப்பதால் 28.04.2025ம் தேதி திங்கட்கிழமை காலையில் வந்து சந்திப்பதாக தகவல் கூறினேன். அவரும் சரி என்று தெரிவித்தார். நேற்று 28.04.2025 காலை சுமார் 11.40 மணிக்கு சிலுவத்தூர் VAO அலுவலகம் சென்று அங்கிருந்த VAO திரு.முகமது சக்கரியா அவர்களை சந்தித்து நிலம் தொடர்பாக ஆவணங்களை கொடுத்தேன். அதனை வாங்கிப்பார்த்த VAO திரு.முகமது சக்கரியா அவர்கள் எனது பெயரில் பட்டா மாறுதல் செய்து தர பரிந்துரை செய்ய வேண்டுமென்றால் ரூ.3,000/-ம் லஞ்சமாக அவருக்கு தாவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அதுவாகவே பட்டா மாறுதல் செய்யப்பட்டுவிடும் என்று வடமதுரை பத்திரப் பதிவு அலுவலகத்தில் சொன்னார்களே என்று தெரிவித்தேன். அதற்கு அவர் அப்படி செய்ய முடியாது, பணம் கொடுத்தால் தான் பட்டா கிடைக்கும் என்றார். மேலும் நீங்கள் கடந்த முறை என்னை சந்திக்கவில்லை, அதனால்தான் நான் பட்டா மாறுதல் முறையாக செய்யவில்லை என்றும் தெரிவித்தார். பின்னர் நான் கஷ்டப்படுகிறேன் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று அவரிடம்

கூறினேன். அதற்கு VAO திரு.முகமது சக்கரியா என்னிடம் இதுவே குறைவானது தான் என்று தெரிவித்து ரூ.2,500/- கொடுத்துவிடுங்கள், நான் பட்டா மாறுதல் பரிந்துரை செய்து அனுப்பிவிடுகிறேன் என்று திட்ட வட்டமாக கூறினார். நான் தற்போது பணம் எதுவும் கொண்டுவரவில்லை என்றும், வீட்டிற்கு சென்று தயார் செய்துவிட்டு நாளை 29.04.2025 காலையில் அவரது மொபைலில் பேசிவிட்டு வந்து கொடுப்பதாக தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். பின்பு நேற்று மாலை சுமார் 05.43 மற்றும் 05.46 மணியளவில் VAO திரு.முகமது சக்கரியா அவர்கள் எனது மொபைல் எண்ணிற்கு அழைத்திருந்தார். நான் மெடிக்கல் கடையில் வேலை பார்த்து கொண்டிருந்ததால் அழைப்புகளை கவனிக்கவில்லை. பின்பு சிறிது நேரம் கழித்து நான் எனது மொபைலிருந்து VAO திரு.முகமது சக்கரியா அவர்கள் மொபைல் எண்ணிற்கு மாலை சுமார் 05.53 மணிக்கு அழைத்து பேசினேன். அப்போது அவர் நாளைக்கு பணம் ரூ.2,500/-ஐ ரெடி பண்ணி குடுத்துவிடுவீர்களா எனக் கேட்டார். நானும் நாளைக்கு பணம் ரெடி பண்ணி தந்துவிடுவதாக கூறினேன். பின்பு நான் யோசனை செய்ததில் பட்டா மாறுதலுக்காக VAO திரு.முகமது சக்கரியா அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து வேலையை முடிப்தற்கு எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.2,500/-ம் லஞ்சமாக கேட்ட சிலுவத்தூர் VAO திரு.முகமது சக்கரியா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் நான் இ சேவை மையத்தில் விண்ணப்பம் செய்த ஒப்புகை சீட்டு, வடமதுரை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1919/2025-ன் நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் VAO லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,500/-ம் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, Sd/-xxxxx (P.மகேஸ்வரன், 29.04.2025)

Sir, Received the complaint on 29.04.2025 at 07.00 Hrs. A confidential verification was made on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.03/2025 u/s 7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the PC (Amendment) Act 2018, on 29.04.2025 at 08.00 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 29.04.2025)

Original FIR along with the complaint of Tr.P.Maheswaran, age 29/2025, S/o.Palanisamy, Door No.2/60, Pannappatti, Rajakkapatti Village, Dindigul East Taluk, Dindigul are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

23/04/25

(P.Palanisamy).
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.